DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )
O.S.No.282/2018
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : **சுந்தரவேல்** |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 12.08.2022 |

Solemnly affirmed by Thiru.S.Chandra Sekar, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் சிவகிரியில் குடியிருந்து வருகிறேன். நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஓய்வு பெற்று வீட்டில் உள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது **சா,சா.1 ஆகும்.** 04.04.2018ல் வாதி குருசாமியிடம் ஒரு நபர் ரு 3லட்சம் கடன் கேட்டு வந்திருந்தார். அப்பொழுது கடன் கேட்டு வந்த உஷா என்ற பெண் என்னிடம் சாட்சி கையொப்பம் போட வரும்படி கூறினார். சாட்சி கையொப்பம் போட நானும் கணேசனும் புரோ நோட்டு எழுதிய ராதாகிருஷ்ணனும் குருசாமி வீட்டிற்கு சென்றோம். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டினை வாதி, பிரதிவாதி, சாட்சிகள் மற்றும் வரைவாளரான 5 பேர்கள் முன்னிலையில் எழுதப்பட்டது. அவ்வாறு எழுதப்பட்ட பின்னர் புரோநோட்டில் ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு உஷா கையொப்பம் செய்தார். அதன்பின்னர் முதலவாதாக நான் சாட்சி

கையொப்பம் செய்தேன் அதன்பின்னர் கணேசன் சாட்சி கையொப்பம் போட்டார். அதன் பின்னர் எழுத்தர் இராதாகிருஷ்ணன் கையொப்பம் செய்தார். அதன்பின்னர் குருசாமி பணத்தை என்னிடம் கொடுத்து எண்ணிப்பார்க்க சொன்னார். அதை நான் எண்ணி பார்த்த பொழுது ரூ 3லட்சம் இருந்தது. பின்னர் அந்த ரூ3லட்சத்தினை பிரதிவாதி எங்கள் அனைவர் முன்னிலையிலும் வாங்கி சென்றார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள முதலவாது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புரோநோட்டில் பிரதிவாதி கையொப்பம் செய்ததை நாங்கள் அனைவரும் பார்த்தோம். வா.சா.ஆ.1ல் நான் சாட்சி கையொப்பம் போட்டதை பிரதிவாதியும் மற்ற அனைவரும் பார்த்தனர்.

**பிரதிவாதி தரப்பில் யாதொரு பிரதிநிதித்துவமும் இல்லாததல் கு.வி முடிக்கப்படுகிறது.**